Kalanjiyam International Journal of Tamil Studies
An international, peer-reviewed quarterly academic research journal
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

Vol. 6 No. 02, August 2026, **p195-206** | Available online at: www.ngmtamil.in
Original Research Paper

பழந்தமிழரின் பன்னாட்டு வணிகத்தில் முத்துக்கள்

Pearls in the International Trade of the Ancient Tamils

முனைவர் வே. பொன்ராஜ்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, வண்ணார் பேட்டை,
திருநெல்வேலி மாவட்டம்-627003, தமிழ்நாடு. இந்தியா.

Dr.V. Ponraj,
Assistant Professor in Tamil, Francis Xavier Engineering College, Vannarpettai,
Thirunelveli-Dist. 62703, Tamilnadu, India.
Email: ponrajve@yahoo.com, Cell-9787596488

Article history
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 04-08-2026
Published: 05-08-2026

*Corresponding Author
Email:
ponrajve@yahoo.com
Tel: *-9787596488*

Abstract: Sangam literature, supported by archaeological evidence and accounts from classical foreign chroniclers like Pliny, Ptolemy, and Marco Polo, provides vital insight into ancient Tamilakam's distinct social, economic, and cultural landscape. Central to this prosperity was the pearl trade, centered in the Pandyan port city of Korkai, which supplied highly sought-after gems to Roman royalty and international markets. Excavations at sites like Keezhadi and Arikamedu—alongside literary references and the adage "Pandya Nadu Muthudaittu"—confirm that pearls were far more than luxury ornaments for kings and women; they represented sophisticated pearl-diving technology, extensive maritime networks, economic strength, and deep-seated cultural traditions. Ultimately, this study uses literary, archaeological, and historical sources to analyze the multifaceted role of pearls as a cornerstone of ancient Tamil wealth and identity.

Keywords: *Port Towns, Barter Trade, Gemstones, Pearl Diving, Exports, Imports, Yavanas, Archaeology, Precious Commodities.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் தனித்த பண்பாடு மற்றும் வாழ்வியலை வெளிப்படுத்தும் அரிய வரலாற்றுப் பெட்டகம். பிறமொழி தாக்கமோ, பிறமொழியாளர்களின் ஆட்சியின் தாக்கமோ இல்லாத தமிழகத்தைச் சங்கஇலக்கியங்கள், அகழ்வாய்வுகள் மற்றும் பிறநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் போன்ற சான்றாதாரங்கள் மூலம் அறியமுடிகிறது. சங்க காலத்தில் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய மிக முக்கிய செல்வங்களுள் ஒன்றாக முத்துக்கள் விளங்கியுள்ளன. பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டணமான கொற்கையில் கிடைக்கப்பெற்ற முத்துக்கள் உலக அளவில் பெரும் புகழ்வாய்ந்தன. கிரேக்க வரலாற்று ஆசிரியர் மெகஸ்தனிஸ் மற்றும் பிளினி போன்றோர் தமிழகத்தின் முத்துக்கள் ரோமபேரரசில் அரச குடும்பத்தினர்களாலும் உயர்குடியினராலும் பெரிதும் விரும்பி வாங்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டுகிறார். பெரிப்ளூயஸ், தாலமி, இத்தாலி நாட்டைச் சார்ந்த மார்க்கோபோலோ போன்ற வெளிநாட்டு பயணிகளின் வரலாற்று குறிப்புகளும் முத்துவணிகத்தைக் குறித்து சிறப்பித்துக் கூறுகின்றன. தமிழகத்தின் முக்கிய ஏற்றுமதி பொருளாகவும் மதிப்புமிக்க பொருளாகவும் முத்துக்கள் விளங்கியுள்ளதைத் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் கீழடி, கொற்கை, அரிக்கமேடு, வெம்பக்கோட்டை மற்றும் ஆதிச்சநல்லூர் போன்ற அகழ்வாய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற முத்துக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் போன்ற ஆதாரங்கள் எடுத்துரைக்கின்றன. . பழந்தமிழரின் முத்து வணிகத்தின் சிறப்பைப் 'பாண்டியநாடு முத்துடைத்து' என்னும் முதுமொழி விதந்தோதுகிறது. . பண்டைய தமிழர் வாழ்வில் அரசர்களும் பெண்களும் முத்துக்களை விரும்பி அணிந்துள்ளனர். இதன் மூலம் சமூகவாழ்வில் முத்துக்கள் உயரிய மதிப்பைப் பெற்றிருந்தன என்பதை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் முத்துக்கள் வெறும் அணிகலன்களாகமட்டுமின்றி அக்கால தமிழர்களின் செல்வச்சிறப்பு, பொருளாதார நிலை, கடல்சார் அறிவு, முத்துக்குளித்தல் , பன்னாட்டு வாணிபத் தொடர்பு, இயற்கையோடு இயைந்த பண்பாடு, வாழ்வியல் சடங்குகள் மற்றும் அரசியல் வலிமை போன்றவற்றை வெளிப்படுத்தும் முக்கிய அடையாளமாகவும் விளங்கியமை குறித்து ஆராய்ந்து உரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

கருச்சொற்கள் :

பட்டினம், பண்டமாற்றுதல், மணிகள், முத்துக்குளித்தல், ஏற்றுமதி, இறக்குமதி, யவனர், தொல்லியல், திரவியங்கள்.

முன்னுரை

சங்கஇலக்கியம் பழந்தமிழரின் வரலாற்று ஆதாரமாக விளங்குகிறது. அதை மெய்ப்பிக்கும் வகையில் அகழாய்வு ஆதாரங்கள் மற்றும் பிறநாட்டு பயணிகளின் பயணகுறிப்புகள் போன்றவை காணப்படுகின்றன. தமிழர்கள் உலகநாடுகள் பலவற்றுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்தனர்

வாணிபத்தில் விலை உயர்ந்த பொருட்கள் இடம்பெற்றிருந்தன . பண்டமாற்றுமுறை வழக்கில் இருந்தபோது தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருட்கள் விலைமதிப்பு மிக்கதாகத் தமிழர்களால் தெரிந்து அனுப்பப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தின் முத்துக்கள் உட்பட பிறப்பொருட்களும் பன்னாட்டு அளவில் ஏற்றுமதி தரத்தைப் பெற்றிருந்தன. அவ்வகையில் தென்தமிழகத்தின் கடல் பகுதியில் மிகுதியும் நடைபெற்று வந்த முத்து வியாபாரம் குறித்தும் அவை கிடைக்கபெறும் தன்மை குறித்தும் ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

முத்துக்கள்

முத்து என்னும் சொல் பல்வேறு அடையாளப் பெயர்களைக் கொண்டது. தூய்மை, நேர்மை, உயர்வு பெருமை, ஒழுக்கம், தியாகம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் ஒருவரை முத்து என்று பெயர் சூட்டி அழைப்பர். நவரத்தினங்களுள் ஒன்றாக சிறந்து விளங்குவது முத்து. "முத்துகளோ கண்கள், முத்து முத்து கண்ணே, தூத்துக்குடி முத்து முத்து, முத்துக்குளிக்க வாரீகளா எனப் பல்வேறு திரைப்படப் பாடல்கள் முத்துக்களைச் சிறப்பித்தும் முத்து கிடைக்கும் இடங்களைப் புகழ்ந்தும் பாடியுள்ளதை அறியமுடிகிறது .ஒருவரது பற்களின் அமைப்பைப் பொறுத்து முத்துப்போல் பல்லழகி என்று கூறுவர். கடலில் வாழும் உயிரினங்களுள் ஒன்று சிப்பி . இது பாறைகளில் ஒட்டியபடியே பெரும்பாலும் வாழும் இது உண்ணும் உணவின் மூலம் வயிற்றுக்குள் செல்லும் மணலானது உள்ளிருந்து உறுத்தல் செய்யும் போது உடலுக்குள் இருந்து ஒருவித திரவம் சுரந்து அதை மூடி நாளடைவில் அத்திரவம் திடப்பொருளாய் உருண்டை வடிவிலோ அல்லது முட்டை வடிவிலோ முத்தாக உருவாகுகிறது. .அவ்வாறு உருவாகும் முத்துக்கள் வெள்ளை, நீலம், பழுப்பு, சாம்பல், இளஞ்சிவப்பு, முதலான பத்து நிறங்களில் காணப்படுகின்றன. இவை பட்டை தீட்டப்பட்ட கல் போல் இயற்கையாகவே உருவாகுவது வியப்புக்குரியதாகும். முத்துக்கள் உருவாக சுமார் ஆறுவருடங்கள் தேவைப்படுகின்றன.

உருண்டை வடிவ முத்துக்கு ஆணிமுத்து என்று பெயர். இது ஒளிரும் தன்மை மிக்கது. நித்திலம், சிலம்பு, தூமணி, நல்வழி என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டு வந்தது. இதனை வடமொழியில் முத்த என்பர். வட்டம், அணுவட்டம், ஒப்பு, குரு, சப்பாத்தி, இரட்டை எனப் பலவகை முத்துக்கள் இருந்ததாகச் சோழநாட்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சங்ககாலத்தில்முத்துக்கள்

கிமு 2350 வருடங்களுக்கு முன்பாகத் தமிழகத்தின் முத்துக்கள் சீன அரச குடும்பத்தினருக்குப் பரிசளிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள் பலவற்றுள்ளும் முத்துக்கள் பற்றிய பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன. பாண்டிய நாட்டில் முத்துக்கள் மிகுதியாகக் கிடைத்ததையும் அம்முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை என்றும் ஔவையார் தெரிவிக்கிறார். இதனை,

“வேழம்உடைத்துமலைநாடு; மேதக்க
சோழவளநாடுசோறுடைத்து – பூழியர்கோன்
தென்னாடுமுத்துடைத்து; தெண்ணீர்வயற்றொண்டை
நன்னாடுசான்றோர்உடைத்து.”
(ஔவையார், தனிப்பாடல்)

என்னும் வரிகள் சிறப்பித்து கூறுகின்றன. இந்தப் பாடல் சேரநாட்டின் யானை வளம், சோழநாட்டின் வேளாண்மை வளம், பாண்டிய நாட்டின் முத்து வளம், தொண்டை நாட்டின் நீர்வளம் மற்றும் விவசாய வளம் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. பழந்தமிழர்கள் தங்கள் நாட்டின் இயற்கை வளங்களை எவ்வாறு பெருமையாகக் கருதினர் என்பதையும் இது காட்டுகிறது.

ஒரு சமூகம் சர்வதேச அளவில் வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் பிறநாடுகளுடனான வணிகத்தொடர்பு என்பது மிகமுக்கியம். அதனைப் பண்டைய தமிழர்கள் மிக நேர்த்தியாகச் செய்து கொண்டுள்ளனர். அவ்வண்ணமே பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியம், எத்தியோப்பியா போன்ற பழம்பெரும் நாகரிகங்கள் கொண்ட நாடுகளுடன் வாணிபதொடர்பு கொண்டிருந்தனர் என்பதை பல்வேறு சான்றுகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு, ,பொன், வெள்ளி, யானை தந்தம், குரங்குகள், மயில்தோகை, அகில், மரங்கள், இரத்தினங்கள், ஆகியவை முக்கிய ஏற்றுமதி பொருட்களாக இருந்து வந்துள்ளன. குறிப்பாக இரத்தினங்கள் முத்து, பவளம், புஷ்பராகம். மரகதம், .கோமேதகம், .வைரம், வைடூரியம். நீலமணி. மாணிக்கம் என்னும் ஒன்பது வகையான விலைமதிக்க முடியாத மணிவகைகளைக் குறிக்கிறது. .இந்த ஒன்பது வகையான மணிகளில் முத்து மட்டுமே கடலுக்குள்ளிருந்து எடுக்கப்படும் சிப்பிகளிவிருந்து கிடைக்கக்கூடிய பொருளாக அமைகிறது. மீதமுள்ள எட்டுபொருட்களும் கல் வகையைச் சார்ந்ததாகும். இத்தகைய கல்மணிகளோடு முத்துக்களும் சேர்ந்து நவரத்தினங்கள் எனச் சிறப்பித்து இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களும் சிறப்பித்து கூறுகின்றன.

முத்துக்குளித்தல்

குளித்தல் என்றால் நீரில் மூழ்குதல் என்று பொருள் முத்து எடுப்பதற்காக நீரில் மூழ்குவதால் முத்துக்குளித்தல் என்பர். முத்து விளையும் இடத்தைச் சலாபம் என்றும் முத்துக்குளித்தலை முத்துச்சலாபம் என்றும் கூறுவர் இதுபோன்று பவளசலாபம், சங்குசலாபம் போன்றவைகளும் நடைபெறுவதுண்டு. சுமார் 8 முதல் 10 முழம் ஆழத்தில் அமைந்துள்ள கடலின் பாறை பகுதியில் காணப்படும் சிப்பிகளை எடுக்க. இடுப்பில் கயிறு கட்டியபடி படகிலிருந்து குதித்து இறங்கி சிப்பிகளைப் பிடுங்கி எடுப்பர். அதனை இடுப்பில் கட்டி இருக்கும் வலைகளில் சேகரிப்பர்.

எல்லா சிப்பிகளிலும் முத்துக்கள் இருப்பதில்லை. சுமார் 100 சிப்பிகளைச் சேகரித்து உடைத்துப் பார்த்தால் தரமான முத்துக்கள் ஒரு சில மட்டுமே இருக்கும் என்று கூறுகின்றனர்.

முத்துக் குளிப்பவர்களைக் குளியாடிகள் என்றும் அழைப்பர். கடல் நீருக்குள் மூச்சடக்கி முத்து எடுப்பதால் அவர்களது காதிலுள்ள குருத்துப் பகுதி சேதமடைந்து கேட்கும் திறன் பாதிப்படைந்து விடுகிறது. இவர்கள் பத்து நிமிடம் வரை கடலுக்குள் மூச்சடக்கி சிப்பிகளைச் சேகரிப்பர். தங்களைத் தாக்க வரும் சுறா போன்ற பெரிய மீன்களை விரட்ட கடல் மணலைக் கிளறி விட்டு திசை திருப்புவர். சங்ககாலத்தில் பாதுகாப்பிற்கு கத்திகளைப் பயன்படுத்தி உள்ளனர். அதையும் மீறி அவைகளின் தாக்குதலுக்கும் ஆளாகிவிடுவதுண்டு. முத்துக்குளிக்கும் பரதவர்கள் சுறாமீன்களால் தாக்கப்படுவதிலிருந்து தப்பிக்க சுறா வசியம் என்னும் மந்திரத்தைக் கூறும் பழக்கம் இருந்துள்ளது. இதனை,

"இலங்கிரும் பரப்பின் எறி சுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலித்தலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக் கலிகெழு
கொற்கை."–(அகம் 350)

என்னும் பாடல் அடிகள் இதற்குச் சான்றுரைக்கின்றன. கடலில் இருந்த கொடிய சுறாக்களை விரட்டி விட்டு, பெரிய படகுகளில் சென்ற பரதவர்கள் ஆழ்கடலில் மூழ்கி வலம்புரிச்சங்கு மற்றும் முத்துகளை எடுத்தனர். அவர்கள் எழுப்பிய மகிழ்ச்சி முழக்கம் பனம்பழங்கள் விழும்பெரும் ஒலியைப்போலக் கேட்க, அந்த ஒலி முழுவதும் கொற்கைத் துறைமுக நகரமே அதிர்வதைப்போல எதிரொலித்தது. .தமிழகத்தில் முத்துக்கள் கிடைக்கப்பட்ட இடங்கள் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கடற்கரை கிராமமே. சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய துறைமுகப் பட்டணங்களில் ஒன்றான கொற்கை. இது பண்டைய தமிழகத்தில் முத்துக்குளித்தலுக்குப் பெயர் பெற்ற இடம்.இதனை,

"ஈண்டு நீர் முத்து படுபரப்பின் கொற்கை முன்துறை."

(நற்றிணை **23 5 6** கணக்காயனார்)

ஆழமான கடலில் முத்துகள் விளையும் பரந்த கடற்பரப்பைக் கொண்ட, சிறந்த துறைமுகமான கொற்கை" என்று கொற்கைத் துறைமுகத்தின் பெருமையையும் முத்து வளத்தையும் இந்தப் பாடல் வரி புகழ்கிறது. இதனையே,

"அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்குமுத்துஉறைக்கும் எயிறுகெழு துவர்வாய்"

(ஐங்குறுநூறு, 185:1–2அம்முவானார்)

என்னும் வரிகள் மெய்ப்பிக்கின்றன. கொற்கைத் துறைமுகத்தில் கிடைக்கும் ஒளிவீசும் முத்துகளை உவமையாகக் கொண்டு, தலைவியின் பற்களின் அழகு வருணிக்கப்படுகிறது. இதன் மூலம் கொற்கை முத்துவளம் மிக்க துறைமுகமாக இருந்தது என்பதும் புலனாகிறது.

பாண்டியர்களின் முதன்மை தலைநகரமாக கிபி 130 வரை கொற்கை இருந்துள்ளது என்று தாலமியின் பயணகுறிப்புச் சுட்டுகிறது. இத்துறைமுகத்தில் முத்துக்கள் மிகுதியும் கிடைக்கப்பெற்றதை முத்து குளித்தலுடன் சங்குக்குளித்தலும் நடந்து வந்துள்ளது. சங்குகளை அறுத்து அணிகலன்களாகவும் அலங்காரப் பொருளாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர். தற்போதைய அகழ்வாய்வுகள் அவற்றை நிரூபித்துள்ளன. சங்கஇலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வாழ்வியல் ஆதாரம் என்பதற்கு கொற்கையே சான்றாக விளங்குகிறது.

“புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை

அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து”

(அகம் 201 4 5 மாமூலனார்)

என்கிறார். பாண்டிய நாட்டின் புகழ்மிக்க கொற்கைத் துறைமுகத்தில், ஒளிவீசும் முத்துக்களும் வலம்புரிச்சங்குகளும் மிகுதியாகக் கிடைத்தன என்பதை இப்பாடல் எடுத்துரைக்கிறது. மேலும், கொற்கை மகளிர் அவற்றை கடல் தெய்வ வழிபாட்டில் படைத்து வணங்கிய மரபையும் பாடல் சுட்டுகிறது. முத்தின் மிகுதியைக் கூறவந்த புலவர் கொற்கைதுறைமுகத்தில் முத்துக்களும் வலம்புரிச் சங்குகளும் சிதறி கிடந்தன என்று விதம் ஓதுவதை காணமுடிகிறது. சங்ககாலத்தில் முத்துக்குளித்தலுக்குக் கொற்கை மிகச்சிறந்த இடமாக இருந்துள்ளது அதற்குப்பின் கடல்கோளின் காரணமாக அத்துறைமுகம் அழிந்துபோய் நில அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் பின்பு உருவான துறைமுகபட்டணம் காயல்பட்டணம் ஆகும்

கொற்கையின் கடலலையானது முத்துக்களை மணலில் பரப்பிவைக்கிறது. அது அங்கு தேரில் வரும் பணக்காரர்களின் குதிரை குழம்பில் சிக்கி இடையூறு செய்யும் அளவிற்கு முத்துக்கள் செழித்து காணப்பட்டுள்ளன. இதனை,

“திரைதந்த ஈர்ங்கதிர் முத்தம்

கவர்நடைப் புரவிகால் வறுத்து புக்கு

நற்றேர் வழுதி கொற்கை முன்துறை”–

(அகம் 130 9 11 வெண்கண்ணனார்) என்னும் பாடல்சிறப்பிக்கிறது. இப்பாடல் கொற்கைத் துறைமுகத்தின் செழிப்பை எடுத்துரைக்கிறது. கொற்கையில் கடல் வழியாகக் கிடைத்த முத்துக்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்த குதிரை வாணிகம் ஆகியவை நடைபெற்றன என்பதை இவ்வடி காட்டுகிறது. கொற்கை பாண்டியர்களின் முக்கியமான கடல் வாணிகத் துறைமுகமாக விளங்கியது.

“மறப்போர்பாண்டியர்அறத்திற்காக்கும்

கொற்கைஅம்பெருந்துறைமுத்து”(அகநானூறு, 27, 9–10)

என்று மதுரை கணக்காயனார் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்ட கொற்கைப் பெருந்துறை முத்து வளம் மிக்கதாக இருந்தது என்பதை எடுத்துரைக்கிறது. பாண்டிய மன்னர்கள் அந்தத் துறைமுகத்தையும் அதன் வளங்களையும் பாதுகாத்தனர் என்பதும் புலப்படுகிறது.

தூத்துக்குடியை முத்துநகர் .என்றே தற்போதும் அழைக்கின்றனர். சங்ககாலம் தொட்டே இப்பகுதி முத்துக்களால் பெயர்பெற்று விளங்கியுள்ளது. இதனை,

"முழங்கு கடல் தந்த விளங்கு கதிர்முத்தம்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப"

(மதுரைக்காஞ்சி 315 324)

என்னும் வரிகள் பண்டைய மதுரையின் கடல் வாணிக வளத்தை எடுத்துரைக்கிறது. கடல் வழங்கிய ஒளிமிக்க முத்துக்கள், சங்குகளை அறுத்துச் செய்யப்பட்டவளையல்கள், பரதவர்கள் கொண்டு வந்த பொருட்கள், வெளிநாட்டு வணிகர்களின் வருகை போன்றவை நாள்தோறும் சிறப்புடன் நடைபெற்றன என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் காவிரிபூம்பட்டினத்தில் முத்து வணிகம் சிறந்து விளங்கியது. சிலப்பதிகாரத்தில் வரும் கோவலனின் தந்தை மாசாத்துவான் ஒரு முத்துவணிகன் ஆவார். இதனை,

"பெருநிலம் முழுதாளும் பெருமகன்தலைவைத்த
ஒருதனிக் குடிகளொடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டுஆண்டு அகவையான்"

(சிலம்பு 30–33)

சிலம்பு மங்கல வாழ்த்து பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

"கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு"

(சிலம்பு 14-80)

என்னும் வரி மூலம் கொற்கைத் துறைமுகம் உயர்தர முத்துக்களை வழங்கிய இடமாக இருந்தது என்பதும், அக்காலத்தில் அந்த முத்துக்கள் அணிகலன்களாகப் பெருமையுடன் பயன்படுத்தப்பட்டன என்பதும் தெரியவருகிறது. சங்ககாலத்திற்குப் பிந்தைய காப்பியமான சிலப்பதிகாரமும் கொற்கையின் முத்துச்சிறப்பை உறுதிப்படுத்துகிறது. பண்டைய தமிழகத்தில் கிபி200க்கு முன்புவரை பொருளியல் நிலையானது வேளாண்மை நெசவு முத்துகுளித்தல் கட்டுமானம் ஆகியன முக்கிய தொழில்களாக இருந்துவந்துள்ளன. மதுரையும் உறையூரும் ஆடை தொழிலில் சிறந்து விளங்கிய பண்டைய நகரங்களாகும்.

DOI: https://doi.org/10.63300/kijts06022026.20

முசிறி முத்துக்கள்

சோழநாடு சோறுடைத்து எனச் சிறப்பித்துக் கூறும் சோழ மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட சோழநாட்டிலும் முத்துக்கள் மிகுந்து காணப்பட்டன என்ற குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக முசிறி என்னும் துறைமுகப்பட்டணத்தில் முத்துக்கள் கிடைத்ததைக் குறித்து பதிற்றுப்பத்து நூல் சிறப்பித்துப் பாடுகிறது.. இதனை,

“கொடுமணம்பட்ட நெடுமொழி ஒக்கலொடு

பந்தர்ப்பெயரிய பேரிசை மூதூர்க்

கடனறி மரபின் கைவல் பாண!

தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை”

(பதிற்றுப்பத்து**, 67)**

குறிப்பாக, கபிலர், சேரமன்னன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடிச் செல்லும் பாணனுக்கு, கொடுமணத்தில் செய்யப்பட்ட சிறந்த அணிகலன்களையும், பந்தர் என்னும் புகழ்பெற்ற ஊரில் கிடைத்த கடல் முத்துக்களையும் பரிசாகப் பெறுவாய் என்று கூறுகிறார். இதன் மூலம் சங்ககாலத்தில் கொடுமணம் அணிகலன் தயாரிப்பிலும், பந்தர் முத்துவளத்திலும் புகழ் பெற்றிருந்தன என்பதை அறியலாம். சோழநாட்டில் பந்தர் என்னும் இடத்தில் முத்துக்கள் விற்கப்பட்டதாகப் பதிற்றுப்பத்து பாடல் சிறப்பித்துக் கூறுகிறது.

பண்டமாற்று முறையில் முத்துக்கள்

உள்நாட்டு வணிகம் அக்கால கட்டத்தில் பண்டமாற்று முறையாகவே நடந்து வந்தது. இதனை,

“பாலொடுவந்து கூழொடுபெயரும் ஆடுடைஇடை மகன்...”

(குறுந்தொகை221-34,முதுகூத்தனார்)

என்று கூறுகிறார். ஆடு வளர்ப்பவர்கள் ஆட்டின் பாலினை கறந்து கொடுத்து உணவு பெற்றுக்கொண்டதாக இப்பாடல் சான்றுரைக்கிறது. சங்ககாலத்தில் இடையர்கள் பால், தயிர், நெய் போன்ற பொருட்களை ஊர்களுக்குக் கொண்டு வந்து, அவற்றிற்கு மாற்றாகத் தேவையான பொருட்களைப் பெற்ற பண்டமாற்று வாணிக முறையை எடுத்துக்காட்டுகிறது. .இதன் மூலம் சங்ககால கிராமிய பொருளாதாரத்தில் பால்–உணவு பரிமாற்றமுறை நடைமுறையில் இருந்ததை அறியமுடிகிறது.. பண்டைய காலத்தில் அரேபியா எவனும் சீனா ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் தமிழர்கள் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் மூலம் முத்துவணிகம் செல்வாக்கு பெற்றது. பருவக்காற்றின் துணையுடன் பாய்மரக்கப்பல்களில் வியாபாரம் செய்துவந்துள்ளனர். மிளகு, முத்து, யானை, தந்தம், ஆடைகள், தங்கஅணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதனை,

“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்…"

(பட்டினப்பாலை, 185–190 கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

என்னும் சங்க இலக்கிய பாடல்வரிகள் காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) துறைமுகத்தில் நடைபெற்ற கடல்வாணிகத்தை விளக்குகிறது. கடல்வழியாக வெளிநாடுகளில் இருந்து குதிரைகள், பொன், மணிகள் போன்ற பொருட்கள் வந்தன; தமிழக அகழ்வாய்வில் ரோம் நாட்டு பணம் அதிகமாகக் கிடைத்துள்ளது. இது அக்காலத்தில் பன்னாட்டு வணிகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயமாகும் எனவே தான் உள்நாட்டில் பண்டமாற்றுமுறையையும் பிறநாடுகளுடன் பணத்திற்கும் வியாபாரம் செய்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. கொற்கை கடற்கரை பட்டணத்தில் அக்கச்சாலை என்று அழைக்கப்படும் நாணயம் செய்யும் இடத்தில் தங்கநாணயம் செய்து அதனை வெளிநாட்டுடனான வியாபாரத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். அதற்குச் சான்றாகத் தற்போதும் அந்த அக்கச்சாலை கட்டிடம் அழியாமல்இருப்பதைக் காணமுடிகிறது.

"யவனர்தந்தவினைமாண்நன்கலம்

பொன்னொடுவந்துகறியொடுபெயரும்."

(சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், இந்திரவிழவூரெடுத்தகாதை)

இவ்வடிகள் பண்டைய தமிழர்களின் கடல் வாணிகச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகங்களில் யவன வணிகர்கள் வந்து, தமிழகப் பொருட்களுடன் பரிமாற்றவாணிகம் செய்தனர். குறிப்பாக மிளகு போன்ற நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதும் புலனாகிறது.

தாலமியின் குறிப்பு படி ரோமானியர்களின் கருவூலம் தமிழக முத்துக்களை வாங்கி குவித்த பெண்களால் காலியாகிவிடும் என்று எச்சரித்ததாக அறியமுடிகிறது. அந்த அளவிற்கு தமிழகத்தின் முத்துக்கள் ரோமானிய பெண்களால் விரும்பி வாங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. அகஸ்டஸ் என்னும் ரோமானிய மன்னனுக்குத் தமிழக கொற்கை முத்துக்கள் பரிசளிக்கப்பட்டுள்ளது. முத்து வியாபாரத் துறைமுகப்பட்டணங்கள் சோழநாட்டில் பூம்புகார் துறைமுகப்பட்டணம் முத்துவியாபாரத்தில் சிறந்துவிளங்கியுள்ளது..

முடிவுக்கு வந்த முத்துக்குளித்தல்

பண்டையகாலத்தில் மிகவும் பிரபலமாக இருந்து வந்த தொழில் முத்துக்குளித்தல் முத்து வியாபாரம் உலகஅளவில் மிகப்பெரிய பெயரை பண்டைய தமிழகத்திற்கு பெற்றுத் தந்தது. பிற்கால பாண்டியர்களின் காலத்தில் சுதந்திரமாக முத்துக்குளியல் நடந்து வந்தது அதனைத் தொடர்ந்து வந்த

DOI: https://doi.org/10.63300/kijts06022026.20

சோழர்காலத்தில் அரசின் அனுமதி பெற்று முத்து எடுக்கவேண்டும் என்று கட்டளை இடப்பட்டது. அதிலும் அரசின் அனுமதி பெற்றே முத்து எடுக்க வேண்டும். கிடைப்பதில் பத்தில் ஒரு பங்கு மன்னனுக்கும் இருபதில் ஒரு பங்கு பிராமணனுக்கும் கொடுக்க வேண்டும் என்று சட்டம் போடப்பட்டது. .இத்தகைய அநீதியான சட்டத்தால் மூச்சடைக்கு முத்தெடுக்கும் மீனவர்கள் அத்தொழிலை கைவிடலானார்கள் .நாகரீக மாற்றத்தால் ஜப்பான் நாட்டினர் சேர்க்கையாக சிப்பிக்குள் முத்துக்களை வளர்க்கும் நுட்பத்தை கண்டறிந்தனர். மேலும் எந்திரம் மூலமாகவும் செயற்கையாக முத்துக்கள் உருவாக்கப்பட்டன. இத்தகைய காரணங்களால் முத்துக்குளித்தல் முடிவுக்கு வந்தது. 1961- இல் தமிழக அரசு முத்துக்களை எடுக்க தடைவிதித்து கடலில் உள்ள முத்துக்களை அரசுடைமையாக்கி சட்டம் இயற்றியது இவ்வாறு தற்போது தமிழகத்தில் முத்துகுளித்தல் என்ற பண்டைய பழக்கம் சங்க இலக்கியங்களில் படித்து அறிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகவே இருந்து வருகிறது என்பது மறுக்க முடியாதஉண்மை.

தமிழகக் கடற்கரையில், குறிப்பாக கொற்கை – தூத்துக்குடி – மன்னார் வளைகுடா பகுதிகளில் பழங்காலம் முதல் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றது. சங்கஇலக்கியங்களில் பரதவர்கள் முத்துக்குளித்தலை மேற்கொண்டனர். .காலப்போக்கில், புவியியல் மாற்றங்கள், முத்துச்சிப்பிகளின் எண்ணிக்கை குறைதல், இயற்கையான முத்துச் சிப்பிப் படுகைகள் (pearl oyster beds) வளம் இழத்தல், கடல் சூழல் மாற்றங்கள் துறைமுகமாற்றம், அரசியல் மாற்றங்கள், புதிய வணிக மையங்களின் வளர்ச்சி போன்ற காரணங்களால் முத்துக்குளித்தல் தொழில் வீழ்ச்சி அடைந்தது. மன்னார் வளைகுடாவில் 1961-க்குப் பின்னர் இயற்கை முத்துக்குளித்தல் தொடர முடியவில்லை என்று மீன்வள ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முடிவுரை

நவரத்தினங்களுள் சிறப்புமிக்கது முத்து உலக அளவில் பெயர் பெற்ற முத்துக்கள் தமிழகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன. பண்டைய தமிழ்நாடு துறைமுகங்களான கொற்கை முசிறி கொடுமணல் காவிரிப்பூம்பட்டணம் ஆகியவற்றிலிருந்து பன்னாட்டு அளவில் ரோம் எகிப்து ஆப்பிரிக்கா சீனா போன்ற நாடுகளுடன் முத்து வணிகம் நடைபெற்றுவந்துள்ளது..பெரிப்ளூயஸ் எழுதிய கடல்வழிச் செய்திகள் என்னும் நூலில் பாண்டியர்களின் தலைநகராக இருந்த கொற்கை பட்டணம் முத்துக்குளித்தலில் சிறந்து விளங்கிய பட்டணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை இந்த முத்துக்குளித்தல் தொழிலில் ஈடுபடுத்தி அதனையே தண்டனையாகக் கொடுத்ததாகச் சான்றுரைக்கிறார். .மூச்சடக்கி முத்து எடுக்க வேண்டும் என்பதனால் பெரும்பாலும் தண்டனையாகக் கூட இந்த வேலையைச் செய்ய கட்டாயப்படுத்தி இருக்கலாம் என்பதை அறியமுடிகிறது. அதே வேளையில் இத்தொழில் முன்பின் அறியாதவர்களால் செய்ய இயலாது. பரதவர்கள் என்று அழைக்கப்படக்கூடிய மீனவர் இனத்தவரே முத்துக்குளித்தல் தொழிலை

பிரதானமாகச் செய்து கொண்டுள்ளனர். இது அவர்களுக்கு உரிமை பெற்ற தொழில் என்பதன் அறியமுடிகிறது. இவர்களுக்கு பொது வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்து சலுகைகள் அளித்துவந்துள்ளர். இவர்கள் முத்து மட்டுமின்றி சங்குக்குளியலிலும் ஈடுபட்டு வந்துள்ளனர. இவர்களை மன்னர்கள் மதிப்பும் மரியாதையுடன் நடத்தி கட்டுப்பாடற்ற தனிசலுகைகளைக் கொடுத்து ஆதரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தாலி நாட்டைச் சார்ந்த மார்க்கோபோலோ எழுதிய தன்னுடைய நூலில் தமிழகத்தில் கொற்கை கடலில் இறங்கி முத்து எடுக்கும் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். அது போன்று கால்டுவெல் என்னும் மேலைநாட்டு அறிஞரும் கொற்கையை அடுத்த காயல்பட்டினம் என்ற பகுதியில் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்று வந்ததை பதிவுசெய்து உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சங்ககால பாண்டியரின் ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட கடல்கோளால் கடற்கரைபகுதிகள் நிலஅமைப்பில் மாற்றம் பெற்றன. பழம்பெருமை மிக்க கொற்கை சுமார் 10 அடி உயரத்திற்கு மண்ணால் மூடப்பட்டு தற்போதைய கடற்கரையில் இருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உட்பகுதியில் காணப்படுகிறது. தற்போது நடைபெற்றுவரும் அகழ்வாய்வு மூலம் இதனை அறியமுடிகிறது இந்தக் கடல்கோள் குறித்து அக்காலகட்ட இலக்கியங்கள் விரிவாகப் பதிவு செய்யாதது ஒரு பெரிய குறைபாடாகும். . சங்கஇலக்கியங்கள் முத்துக்களின் பெருமையையும் முத்து வணிகத்தின் சிறப்பையும் சான்று பகிருகின்றன. இதே காலகட்டத்தில் தான் கீழடி அரிக்கமேடு குமரிக்கண்டம் முதலான பகுதிகள் கடல்கோளால் அழிந்துபட்டு போயிருக்க கூடும் என்பதை ஒப்பபீட்டு அளவில் விரிவான ஆய்வு செய்ய இந்த ஆய்வு வழிவகுக்கிறது.

சான்றுகள்:

[1]. Adigal, Ilango. *Silappathikaram*. Edited by U. V. Swaminatha Iyer, with commentary by Adiyarkku Nallar, U. V. Swaminatha Iyer Library.

[2]. *Ainkurunuru: Text with the Ancient Commentary*. Edited by U. V. Swaminatha Iyer, U. V. Swaminatha Iyer Library.

[3]. *Akananuru: Text and Commentary*. Edited by V. Rajagopala Iyengar, Chennai.

[4]. *Akananuru – Text and Commentary*. Commentary by N. M. Venkatasamy Nattar and Karandhai Kaviyarasu R. Venkatasalam Pillai, T. Vai. I. Tamil Sangam Publication, 1968.

[5]. Balakrishnan, R. *Journey of Civilization: Indus to Vaigai*. RMRL.

[6]. Department of Archaeology and Tamil Nadu Text Book and Educational Services Corporation. *Keeladi: "Sangam City Civilization on the Bank of River Vaigai"*. Government of Tamil Nadu.

[7]. ---. *Porunai Civilization*. Government of Tamil Nadu.

[8]. Duraisamy Pillai, Avvai Su., commentator. *Avvaiyar's Individual Poems (Avvaiyar Thanippadalgal)*. South India Saiva Siddhanta Works Publishing Society.

[9]. Iyer, U. V. Swaminatha, editor. *Pattuppāṭṭu*. New Century Publication / Tamil University Edition.

[10]. Jayabaskaran, Y. *Progress of Research under Scheme on Pearl Culture, 1974–78*. Central Marine Fisheries Research Institute (CMFRI).

[11]. *Natrinai: Text and Commentary*. Commentary by Pinnathur Narayanasamy Iyengar, Kazhaga Veliyeedu (Saiva Siddhanta Publishing Society).

[12]. Nilakanta Sastri, K. A. *A History of South India: From Prehistoric Times to the Fall of Vijayanagar*. Oxford UP.

[13]. *Pathitrupathu: Text with the Ancient Commentary*. Edited by U. V. Swaminatha Iyer, Dr. U. V. Swaminatha Iyer Library.

[14]. Pillai, K. K. *History of Tamil Nadu: People and Culture*. International Institute of Tamil Studies.

[15]. Pillay, K. K. *Social Life of Tamils*. TNTB & ESC / RMRL.

[16]. ---. *Studies in the History of India with Special Reference to Tamil Nadu*. Published by the author.

[17]. *Purananuru – Text and Commentary*. Commentary by U. V. Swaminatha Iyer, Dr. U. V. Swaminatha Iyer Library, 1971.

[18]. Singaravelu, S. *Social Life of the Tamils: The Classical Period*. International Institute of Tamil Studies.

[19]. Subatamanian, S. V., and K. D. Thirunavukkarasu. *Historical Heritage of the Tamils*. International Institute of Tamil Studies.

[20]. Tamil Nadu Fisheries Department. *Pearl and Chank Fisheries: History*. Government of Tamil Nadu.

[21]. Valarmathi, M. *The Contributions of the Tamils to Indian Culture*. International Institute of Tamil Studies.

[22]. Venkatasamy, Mayilai Seeni. *Ancient Tamil Trade*. New Century Book House.